## செயலர் மற்றும் துணைச் செயலர் தேர்வும் அறிமுகமும்

- 27.06.2025 அன்று 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான செயலர் மற்றும் துணைச் செயலர் தேர்வு செய்யப்பட்டது.
- மாற்று நாடக அமைப்பின் நோக்கம் மற்றும் செயல்முறைகள் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.







## பறையிசைப் பயிற்சி

- 05.08.2025 அன்று ஒயாசிஸ் அரங்கத்தில் பறை இசை பயிற்சி அளிக்கப்பட்டது.
- இரண்டாம் ஆண்டு தமிழ் துறையைச் சார்ந்த சக்திவேல் ராஜ் மற்றும் விகாஸ் போன்ற மாணவர்கள் பயிற்சி அளித்தனர்.
- இசைக்கருவிகளை இசைக்கும் திறனையும் பறை இசையின் அடவுகளையும் மாணவர்கள் கற்றுக் கொண்டனர்.










## வன்பகடி தடுப்பு தினம் (விழிப்புணர்வு நிகழ்வின் பயிற்சி)

- 18.08.2025 அன்று வன்பகடி தடுப்பு தினத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.
- நாடகக் கலைஞரான திரு சாமு அவர்கள் ஒயில் பயிற்சி அளித்தார் .
- வன்பகடி தடை செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு நாடகம் ஒன்று மாணவர்களால் தயாரிக்கப்பட்டது.
- அந்த நாடகத்திற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டது.










## வன்பகடி தடுப்பு தினம் (விழிப்புணர்வு நிகழ்வு)

- 18.08.2025 வன்பகடி தடுப்பு தினம் நிகழ்த்தப்பட்டது.
- அன்று வன்பகடி செய்ய மாட்டோம் என்ற உறுதிமொழியை கல்லூரியின் அனைத்து மாணவர்களும் சரி எடுத்துக்கொண்டோம்.
- மாற்று நாடக இயக்க மாணவர்களால் ஒயில் நடனம் silver jubilee கட்டிடத்தின் எதிரில் மாணவர்களால் ஆடி காண்பிக்கப்பட்டது. வன்பகடி தடுப்பு குறித்த நாடகம் அரங்கேற்றப்பட்டது .








## விழிப்புணர்வு ஊர்வலம்

- 24.11.2025 இன்று விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.
- சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒற்றுமையை வளர்க்கும் பொருட்டு தூய நெஞ்சக் கல்லூரியின் மாற்று நாடக இயக்க மாணவர்கள் (சுழற்சி 2) கல்லூரியில் இருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் வரை ஊர்வலமாக சென்றனர்.
- மாணவர்களிடையே சமூக விழிப்புணர்வையும் தேசப்பற்றையும் உருவாக்கும் நோக்கத்தோடு இந்த ஊர்வலம் நடைபெற்றது.







## <u>நாடக பயிற்சிப் பட்டறை</u>

**மாற்று நாடக இயக்கம்** **மதிப்பீட்டு அறிக்கை - 2025-**

30.11.2025 கரேஞோ அன்று அரங்கத்தில் “நாடகத்தின் அடிப்படை நுட்பங்கள்” என்னும் தலைப்பில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முனைவர் ம.வித்யா வரவேற்புரை ஆற்றினார். அருட்தந்தை முனைவர் தியோபில் ஆனந்த், கூடுதல் முதல்வர், தூய நெஞ்சக் கல்லூரி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நாடகம் அன்றாட வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருக்கும் பாங்கினை அருட்தந்தை சாம்சன் சண்முகம் அடிகளார் எடுத்துரைத்து நோக்கவுரை ஆற்றினார்.

விருந்தினராக நாடகப் பயிற்றுநர் திரு. இராஜசேகர் அவர்கள் வருகைப்புரிந்தார். கவனக்குவிப்பு விளையாட்டு, கற்பனை செய்தல் போன்ற வற்றோடு சிறப்பாகத் துவங்கிய நிகழ்வு, காலம் மற்றும் இடம் என்னும் பயிற்சியின் போது நாடகமாக தோற்றம் பெறத் துவங்கியது. மாணவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் இப்பயிற்சியைக் கற்றுக்கொண்டனர். இறுதியாக, முனைவர் வீ.பூமிநாதன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.


தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் - 635601,
திருப்பத்தூர் மாவட்டம்

**மாற்று நாடக இயக்கம்**

நாடக பயிற்சிப் பட்டறை

நாள் : 30/11/2025 நேரம்: காலை 9.00 மணி
இடம் : கரேஞோ அரங்கம்

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | முனைவர் ம. வித்யா |
| வாழ்த்துரை | : | அருட்தந்தை முனைவர் தியோபில் ஆனந்த்<br>கூடுதல் முதல்வர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர். |
| நோக்கவுரை | : | அருட்தந்தை முனைவர் சாம்சன் சண்முகம்<br>துணை முதல்வர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர். |
| நாடக செயற்பாட்டாளர் | : | கா. இராஜசேகர் MSC.B.ED |
| தலைப்பு | : | நாடகத்தின் அடிப்படை நுட்பங்கள் |
| நன்றியுரை | : | முனைவர் வீ. பூமிநாதன்<br>தமிழ் உதவிப்பேராசிரியர் (சுழற்சி-2) |






# கிருஸ்துமஸ் நாடகம்

- 23.12.2025 கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு தூய நெஞ்சக் கல்லூரியின் காமராஜர் அரங்கத்தில் நாடகம் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டது.
- பகிர்ந்து கொள்ளுதலே கிறிஸ்துமஸின் நோக்கம் என்பதை இந்நாடகம் அறிவுறுத்தியது.



# பசுமை பாதுகாப்புத்திட்டம்

- 12.01.2026 அன்று தமிழக அரசின்பசுமை பாதுகாப்பு திட்டத்தின் சார்பாக திருப்பத்தூர் ஏரியினைச் சுத்தம் செய்யும் பணிக்காக மாற்று நாடக இயக்கத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் பங்கேற்றனர்.
- கையுறையும் முகக்கவசமும் அணிந்து கொண்டு மாணவர்கள் திருப்பத்தூர் ஏரியில் நிறைந்திருக்க கூடிய குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தனர்.
- இந்நிகழ்வினை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவங்கி வைத்தார்.









## விழிப்புணர்வு நிகழ்வு பயிற்சி

- 22.01.2026 தொலைபேசியை அதிகமாக பயன்படுத்துவதை தடுப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்வு மாற்று நாடக இயக்க மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது.
- அலைபேசி இல்லாத அந்த காலமும் அலைபேசியுடன் வாழும் இந்த காலமும் எப்படி இருக்கும் என்பது குறித்த காட்சி மாற்று நாடக இயக்க மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.
- தொலைபேசியை அளவுக்கு அதிகமான நேரம் உபயோகிப்பது பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்பதைக் குறித்த விழிப்புணர்வு நடனமும் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது










